# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 186/ந/2017**
**ஆணை நாள்: 13–12–2018**

திரு. B . பாண்டித்துரை,
3பி, கத்தப்பட்டு செட்டியார் தெரு,
மேலூர் - 625 106. - **மனுதாரர்**

திரு. தியாகராஜன்,
கணக்காளர்,
மேலூர் நகராட்சி,
மதுரை மாவட்டம் - **எதிர்மனுதாரர்**

மதுரை மாவட்டம், மேலூர், 3பி, கத்தப்பட்டு செட்டியார் தெரு, முகவரியில் வசிக்கும் திரு. B . பாண்டித்துரை அவர்களின் 12.9.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.9.2017 அன்று பெறப்பட்டு, 186/17 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரரின் அறிக்கையினை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

**ஆணை**

மதுரை மாவட்டம், மேலூர், 3பி, கத்தப்பட்டு செட்டியார் தெருவில் வசிக்கும் திரு. B . பாண்டித்துரை என்பவர் 12.9.2017 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் மேலூர் நகராட்சி அலுவலக கணக்காளர் திரு. தியாகராஜன் மேலூர் நகராட்சி அலுவலக பல்வேறு கோப்புகள், கணக்குப் பதிவேடுகள் மற்றும் வங்கிப் புத்தகங்கள் ஆகியவற்றினை திருத்தம் செய்தும், கோப்புகளை அழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், மேலூர் நகராட்சி சுகாதார அலுவலகத்தை இடித்துவிட்டு புதிதாகக் கட்டப்பட்டுள்ள நான்கு கடைகளுக்கான ஏலத்தில் பெறப்பட்டதாகக் கூறப்படும் பத்து வங்கி வரைவோலைகள் (சுமார் ரூ.25,00,000/-) மேலூர் நகராட்சி வங்கி கணக்கில் எதிர்மனுதாரரான கணக்காளரால் செலுத்தப்படாமல் முறைகேட்டில் ஈடுபட்டது குறித்து முறைமன்ற நடுவத்தின் விசாரணையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் கணக்காளராக பணியாற்றிய காலங்களில் அவரால் கையாளப்பட்ட வங்கி புத்தகங்கள், கணக்கு பதிவேடுகள், வங்கி காசோலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அலுவலகக் கோப்புகள் அனைத்தையும் பாதுகாப்பாக பராமரித்து சிறப்பு தணிக்கைக்கு உட்படுத்திட கோரியுள்ளார்.

எதிர்மனுதாரர் திரு. மு. தியாகராஜன் அவர்கள் 13.12.2017 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். மேலூர் நகராட்சியில் தான் கணக்கராக பணிபுரிவதாகவும், மனுதாரர் திரு. பாண்டித்துரை யார் என்று தனக்கு தெரியாது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் திரு.வேலன் அவர்கள் கோரிய விபரங்களுக்கு 27.2.2017 பதில் அளித்ததாகவும், நகராட்சியில் மூன்று லாரிகள் உள்ள நிலையில் பைப் மூலம் குடிநீர் வழங்கும் போது ஏதாவது இடர் ஏற்பட்டால் லாரி மூலம் குடிநீர் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். ஒப்பந்தப்புள்ளி முறையாக பெறப்பட்டு, இறுதி செய்து, ஒவ்வொரு ஆண்டுக்கும் குத்தகை ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். குப்பை சேகரிக்கும் பணிக்கு பெறப்பட்ட மூன்று டெண்டர்களில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டது என்றும் மேலூர் நகராட்சியில் சுகாதார பிரிவின் கட்டுப்பாட்டில் இருந்த கட்டிடத்தை இடித்துவிட்டு நான்கு கடைகள் கட்டப்பட்டன என்றும் ஏற்கனவே இருந்த இரண்டு கடைகளையும் சேர்த்து டெண்டர் கோரப்பட்டு ஏலம் விடப்பட்டது என்றும், அனைத்து கடைகளுக்கும் வரப்பெற்ற ரூ.28.50 லட்சம் மதிப்பீலான இருபது கேட்பு வரைவோலைகள் 14.3.2016ல் நகராட்சி கணக்கில் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பிரிவில் பராமரிக்கப்படும் ரொக்க புத்தகம், வரவு செலவு பதிவேடு மற்றும் வங்கிக் கணக்குகள் அனைத்தும் முழுமையாக பராமரிக்கப்பட்டு வருவதுடன் தினசரி வரவு மற்றும் செலவினங்கள் அனைத்தையும் வங்கிக் கணக்குடன் சரிபார்த்து, (Reconciliation) இணக்கம் செய்த பின்பே பிரதிமாதம் நகராட்சி கணக்குகள் (Trial Balance) உள்ளாட்சி நிதிக் தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். 31.3.2017 மு டிய ஆண்டு கணக்குகள் வங்கிக் கணக்குடன் இணக்கம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநர், மதுரை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும், பராமரிக்கப்படும் கணக்கு பதிவேடுகள் மற்றும் வங்கி புத்தகங்கள் முறையாக மாதமாதம் நகராட்சியில் வரப்படும் வருவாய் மற்றும் நகராட்சி மூலம் - மேற்கொள்ளப்படும் செலவீனத்தையும் வங்கி கணக்குடன் இணக்கம் (Reconciliation) செய்து முறையாக தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு 31.3.2017 வரை ஆய்வு செய்யப்பட்டு தணிக்கை முடிவு பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 2016-17 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஆன்லைன் மூலம் வரவு செலவு Centralised web based software மூலம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி சம்பந்தமான கோப்புகள், கணக்கு பதிவேடுகள், வங்கி புத்தகங்கள் மற்றும் வங்கி கணக்கில் மாற்றம் செய்யப்படும் விபரம் மற்றும் வங்கி வரைவோலைகள் பதிவேடு முறையாக மேலாளர் வழியாக ஆணையருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பத்து வங்கி வரைவோலைகளும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மேலூர் கிளையில் வங்கிக்கணக்கு எண்.6704ல் இருசால் செய்யப்பட்டுள்ளது என்றும், புதிதாக கட்டப்பட்ட நான்கு கடைகளுக்கான ரூ.25,50,000/- மதிப்பிலான வரைவோலைகள் வங்கியில் 14.3.2016ல் செலுத்தப்பட்டுள்ளதாகவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையினை வங்கி கணக்கில் நகராட்சி செலுத்தியதில் எந்தவித முறைகேடுகளும் நிகழவில்லை எனவும் 20.3.2017 நாளிட்ட கடிதம் எண்.129/2016/அ2–இல்

நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மனுதாரர் 13.12.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி, புகாரினை நிரூபிக்க தகுந்த ஆதாரங்களை அளிக்கவில்லை. இந்நிலையில், எதிர்மனுதாரர் மற்றும் மேலூர் நகராட்சி ஆணையர் ஆகியோர்களின் விளக்கத்தினை ஏற்று, மேல்நடவடிக்கை கைவிடலாம் என முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//——

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு. B . பாண்டித்துரை,
த/பெ. பாலுச்சாமி,
3பி, கத்தப்பட்டு செட்டியார் தெரு,
மேலூர் - 625 106.

2. திரு. மு. தியாகராஜன்,
உதவியாளர்,
மேலூர் நகராட்சி ஆணையர் மூலமாக.

3. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.

4. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.

5. ஊராட்சி பிரிவு, உதவி பிரிவு அலுவலர்.